ஆதிபராசக்தி பீடத்தை நிறுவி, அரை நூற்றாண்டிற்கும் மேலாக ஆன்மிகத் தொண்டாற்றுவதில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக்கொண்டவர். மேலும், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களைத் துவங்கி சமூக சேவைகளை வழங்கிய திரு. பங்காரு அடிகளார் அவர்கள் 'பத்மஸ்ரீ' விருது பெற்ற பெருமைக்குரியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், பக்தர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஆ) விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவுடைமைப் போராளியும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் முதுபெரும் தலைவருமான திரு. என். சங்கரய்யா அவர்கள் 15–11–2023 அன்று தமது 102–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இளம் வயதிலேயே பொது வாழ்க்கையில் ஈடுபட்டு இந்திய நாட்டுக்காகவும், உழைக்கும் வர்க்கத்தினருக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்த திரு. என். சங்கரய்யா அவர்கள் இந்திய விடுதலைக்கு முன்பே தேசியம் சார்ந்த செயல்பாடுகளால் பலமுறை சிறைக்குச் சென்றவர்.

1967–1971 ஆம் ஆண்டுகளில் மதுரை மேற்கு தொகுதியிலிருந்தும், 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் மதுரை கிழக்கு தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியவர். இவரது மகத்தான சேவையைப் பாராட்டி, 2021 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு இவருக்கு 'தகைசால் தமிழர்' விருதை வழங்கி கௌரவித்தது.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், கட்சித் தோழர்கள் உள்ளிட்ட அனைவருக்கும்

இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10–05

3. அரசினர் தனித் தீர்மானம்

13-11-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்து, திருப்பி அனுப்பப்பெற்ற 15-வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 2 சட்டமுன்வடிவுகள் மற்றும் 16-வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 8 சட்டமுன்வடிவுகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்திட தீர்மானித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை” என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாக சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல்நலனைவிட இந்த மாநிலத்து மக்கள் நலன், (மேசையைத் தட்டும் ஒலி) தாய் தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த மாண்புமிகு சட்டப் பேரவை நலன்தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்தச் சட்டமன்றத்தைத்